**<u>முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண்.380/2022 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகவேல் | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : வையாபுரி | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 13.02.1995 தேதியில் வையாபுரி என்பவர் சுலோச்சனாவிற்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரதின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 23.09.2014 வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே எழுதிக்கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 10.07.2018 ஈரோடு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.337/2018 வழக்கின் பிராது சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 10.10.2018 பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 09.07.2021 தேதியிலுள்ள சுலோச்சனா வாதிக்கு எழுதிவைத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 09.09.2021 வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 03.12.2021 பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய பதிலறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 27.01.2022 பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 02.02.2022 வாதி பிரதிவாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. நி.வே.ம.எண்.6/2022 ஈரோடு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சார்பு செய்யப்பட்ட மனு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. சொத்து வரி மற்றும் மின்கட்டண ரசீதுகள்(மொத்த எண்ணிக்கை 6) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. புகைப்படம் (எண்ணிக்கை 9) மற்றும் ஒளிப்பட நகல் (எண்ணிக்கை 1) இணையதள நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஈரோட்டில் தாக்கல் செய்யப்பட்ட R.L.T. OP.NO.3/2022 மனு உண்மை நகல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.